**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.11/2021</u>**

பெயர் : சத்தியவான்ராஜ் P.W.1.

த/பெ. : சந்திரசேகரன்

தேதி : 10.02.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>6 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தடைஉத்தரவுகோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். என்ன தடை உத்தரவு கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் சாகுபடி செய்வதை இடையூறு செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கின் 1–ம் வாதி எனது தாயார் என்றால் சரிதான். நான் ராஜாங்கம் என்பவரின் பேரன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கோமதி ராஜாங்கம் என்பவரின் மருமகள் என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகள் ராஜாங்கத்தின் மகன்கள் என்றால் சரிதான். வாதிகளும், 1 முதல் 5 பிரதிவாதிகளும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி வேறு குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் உரிமையாளர் 6ம் பிரதிவாதி பானுமதி என்றால் சரிதான். தாவாசொத்தை 6ம் பிரதிவாதியிடமிருந்து பதிவுசெய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் கிரயம் பெறப்பட்டுள்ளதா என்றால் எனது பாட்டி குப்பம்மாள் பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணம் பதிவுசெய்யப்பட்டதா இல்லையா என்றால் பதிவுசெய்யப்படாதது. வாசாஆ 3 ஆன ஆவணம் முறைப்படி முத்திரைத்தீர்வை செலுத்தப்பட்டு பதிவுசெய்யப்படாத ஆவணம் என்பதால் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை கிரயம் பெறுவதற்காக நடவடிக்கை ஏதேனும் எடுத்தோமா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆன 27.06.2015 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு எனது தாயாரால் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மட்டுமே அனுப்பப்பட்டது என்றாலும் 6ம் பிரதிவாதிக்கு அனுப்பபடவில்லை என்றாலும் சரிதான்.

3. 6ம் பிரதிவாதி 07.12.2017ல் எனது தந்தைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் தாவா சொத்தினை எனது தந்தை ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறான

விபரங்களை கொடுத்து அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டு திட்டத்தின் ரசீதில், தாவாசொத்தின் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதில் சர்வே எண் குறிப்பிடமாட்டார்கள். வாசாஆ 4 ஆன வரி ரசீது பானுமதிக்காக நான் வரி செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 21.08.2015 தேதியில் வாய்தா ரசீது செலுத்தப்பட்டுள்ள நிலையில் அன்றைய தேதியில் சிட்டா மற்றும் அடங்கலை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. வருமான சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் ஆகியவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விண்ணப்பிக்க இயலுமா என்றால் முந்தைய காலத்தில் விண்ணப்பிக்க இயலும், தற்போது இயலாது. 24.04.2018 தேதியிட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பெற்ற ரசீதில் வருமானம் மற்றும் இருப்பிட சான்றிதழினை பெறுவதற்காக நான் தொகை செலுத்தியுள்ளதால், அந்த ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்புடையது இல்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் 147/2A, விஸ்தீரணம் 1.67 ஏக்கர் (5 மா) ஆகும். தாவா சொத்தினை 6 ம் பிரதிவாதி யாரிடம் அடமானம் வைத்திருந்தார் என்றால் எனது அம்மா லீலாவதியிடம் 2000 ஆம் ஆண்டு அடமானம் வைத்தார். அந்த இடத்தை எந்த ஆண்டு மீட்டார் என்றால் திரும்ப மீட்க வில்லை.

5. 6 ம் பிரதிவாதி பானுமதி 2021 ஆம் ஆண்டில் தாவா சொத்தினை ஆக்கிரமித்து விட்டதாக எங்கள் மீது செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். தாவா சொத்தினை நாங்கள் பாகப்பிரிவினை செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 6 ம் பிரதிவாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை சட்டப்படி கிரயம் பெறாமல் நாங்கள் பாகப்பிரிவினை செய்துகொள்ள இயலாது என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதிக்கு ஒரு மகன் இருந்து அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் யாரும் கிடையாது என்பதால் அவர் அடமானம் வைத்த சொத்தினை திருப்பி கொடுக்காமல் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு 6 ம் பிரதிவாதியிடம் தகராறு செய்துகொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை அவருக்கு தெரியாமல் எந்த ஆவணம் ஏற்படுத்திக்கொண்டாலும், அந்த ஆவணங்கள் 6 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

6. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் போக்கிய தொகையான ரூ.35,000/– பிரதிவாதிகள் திருப்பி கொடுத்துவிட்டால் நான் அவர்களிடம் தாவாசொத்தினை கொடுக்க தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

போக்கிய தொகையை யாரிம் கொடுத்து நிலத்தை சாகுபடி செய்து வருகிறேன் என்றால் பாட்டி குப்பம்மாளிடம் கொடுத்து நிலத்தை சாகுபடி செய்து வருகிறேன். 6ம் பிரதிவாதி தாவா சொத்தினை பணம் கொடுத்து மீட்டு சாகுபடி செய்து வந்தவரிடம் நாங்கள் அவரை மிரட்டி நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு, நிலத்தை ஒப்படைக்காமல் சாகுபடி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நிலத்தை உரிமையாளருக்கு எதிராக நாங்கள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

7. 6ம் பிரதிவாதியை ஏமாற்றி அவரிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது குடும்பத்தை சேர்ந்தவர்களை 1 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்திற்கு எதிராக 1 முதல் 5 பிரதிவாதிகளையும் வாதிகளாக சேர்ந்துதான் இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை தாக்கல் செய்யும் முன்னர் 6ம் பிரதிவாதிதான் தாவா சொத்தில் சாகுபடி செய்துவந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கினை தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**